**ந.க.எண்.509/2022/இ1** **நகராட்சி அலுவலகம்,**
**கூடலூர்.**
**நாள்:– 28.09.2022**

**சாதாரண கூட்ட அழைப்பிதழ்**

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் புரட்டாசி திங்கள் 13–ஆம் நாள் (செப்டம்பர் மாதம் 30–ஆம் (நாள்:–30.09.2022) வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 08/2022 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.182, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 08/2022 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.183, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூரில் “Managing and Flourishing in Dual Role” என்ற பயிற்சி 21.09.2022 முதல் 23.09.2022 வரை மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ளுமாறு பெயர்பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் பேரில் பயிற்சியில் கலந்து கொள்ள நாள் ஒன்றிற்கு ரூ.1000/– வீதம் மூன்று நாட்களுக்கு (3x1000 = 3000) ரூ.3000/– ஐ இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக வழங்கவேண்டியுள்ளதால் உத்தேச செலவினம் ரூ.3000/–க்கு மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.184, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவுமேலாண்மை திட்டத்தின் கீழ் அன்றாடம் உருவாகும் 14 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள்என தரம் பிரித்து சேகரித்து முறையாக அப்புறப்படுத்தப்பட்டுவரும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 60 துப்புரவுபணியாளர்கள் பணியமர்த்த சென்னை நகராட்சிகளின் இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி மூன்று ஆண்டுகளுக்கு 01.03.2019 முதல் 28.02.2022 வரைஅனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்கண்ட பணியின் ஒப்பந்த காலம் 28.02.2022.ஆம் தேதியுடன் முடிவடைந்ததால், மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை

அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாலும் மேலும் பொது சுகாதாரத் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட பணிக்கான அனுமதி பெறும் வரை மேற்கண்ட பணியினை ஏற்கனவே மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள் மூலமாக 01.03.2022 முதல் 31.05.2022 வரை மற்றும் 01.06.2022 முதல் 31.08.2022 வரை என ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்த நிலையில் நாளது தேதி வரை நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களால் அனுமதி வழங்ப்படாமல் உள்ளதால் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி 01.09.2022 முதல் 31.11.2022 முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு..

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u> 1 பொது சுகாதாரத் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதியும் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களால் அனுமதி வழங்கும் வரை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை ஏற்கனவே மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள் மூலமாக 01.09.2022 முதல் 30.11.2022 முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.185, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**128** நாள் **08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **12.08.2022** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் SKY LADER வாகனத்திற்கு வருடாந்திர தகுதிச்சான்று பெறத்தேவையான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் தகுதிச்சான்று பெறும் பணிக்கு | 1.25 | திரு.கமலக்கண்ணன் திருமலை மோட்டார் ஒர்க்ஸ் கம்பம் | 1.16% | – |
| | | | ஆனந்தன் பாலாஜி டிங்கர் மோட்டார் ஒர்க்ஸ் கம்பம் | – | 0.04% |

<u>அலுவலகக் குறிப்பு : –</u>

1) வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 1.16% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.கமலக்கண்ணன்,திருமலை மோட்டார் ஒர்க்ஸ் கம்பம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.186, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**127** நாள்.**08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **12.08.2022** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கு

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான மின் உதிரிப்பொருட்கள் வாங்குதல் | 2.50 | கே.எம்.பி.எல்.எலக்ட்ரிக்கல்ஸ் கம்பம், | மதிப்பீட்டு விலைவிகிதம் | – |
| | | | இருள் ஸ்டோர்ஸ், கே.கே.பட்டி | – | 0.80% |

**அலுவலகக் குறிப்பு : –1)** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ள கே.எம்.பி.எல்.எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) தெருவிளக்குகளின் பராமரிப்பின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.187, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதிஎண்:30(2)ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சி பகுதிகளில் பொருளாதாரத்தில் நலிவடைதோர் பகுதிகளை(EWS) கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் புல எண்கள்(Survey Nos) மற்றும் கிராமம் விபரங்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள பட்டியலின்படி இடங்களை (‘EWS’ பகுதி) பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி என்ற அறிவிப்பினை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள்(EWS)** | | |
|---|---|---|
| **வரிசை எண்.** | **கிராமம்** | **புல எண்** |
| 1. | மேலக்கூடலூர்-வடக்கு | 1463 முதல் 3085 வரை |
| 2. | | 3086 முதல் 3149 வரை |
| 3. | | 3041 முதல் 3084 வரை |
| 4. | | 1702 மற்றும் 1692 |
| 5. | | 1478 முதல் 1481 வரை |
| 6. | | 1471 முதல் 1475 வரை |
| 7. | | 1463 முதல் 1469 வரை |
| 8. | மேலக்கூடலூர்-தெற்கு | 3241 |
| 9. | | 2392/2B |

**அலுவலக குறிப்பு:-**

1. கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகளை கண்டறியப்பட்டு அவற்றின் புல எண்கள்(Survey Nos)விபரங்களை மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. பட்டியலில் கண்டுள்ளபடி, பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதியாக அறிவிக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண்:30(2)ன்படி அரசின் ஒப்புதல் பெற அதற்கான செலவுத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.188, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019,விதி எண்:30(1)ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சி பகுதிகளில் தொடர் கட்டுமான பகுதிகளை (Continuous Building Area) கண்டறியப்பட்டு, புல எண்கள்(Survey Nos)

மற்றும் கிராமம் விபரங்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள பட்டியலின்படி இடங்களை ('CBA' பகுதி) என்ற அறிவிப்பினை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| தொடர் கட்டுமானப்பகுதி | | |
|---|---|---|
| **வரிசை எண்.** | **கிராமம்** | **புல எண்** |
| 1. | கீழக்கூடலூர்-மேற்கு | 2293/1 முதல் 94 வரை |
| 2. | | 2294/1 முதல் 101 வரை |
| 3. | | 2324/1 முதல் 103 வரை |
| | | |
| 4. | மேலக்கூடலூர்-தெற்கு | 3067/91 முதல் 116 வரை |
| 5. | | 3067/2 முதல் 88 வரை |
| 6. | | 3069/6 முதல் 52 வரை |
| 7. | | 3070/15 முதல் 21 வரை |
| 8. | | 3071/4 முதல் 158வரை |
| 9. | | 3078/2 முதல் 53 வரை |
| 10. | | 3085/3 முதல் 60 வரை |
| 11. | | 3086/126 முதல் 167 வரை |

**அலுவலக குறிப்பு:-**

1. கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொடர் கட்டுமான பகுதிகளாக கண்டறியப்பட்ட புல எண்கள்(Survey Nos) விபரங்களை மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி,தொடர் கட்டுமானப் பகுதி (CBA) விபரங்களை அரசின் ஒப்புதல் பெற நகர் ஊரமைப்பு துறை,சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்ப மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019 விதி எண்:30(1)ன்படி அரசின் ஒப்புதல் பெற அதற்கான செலவுத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.189, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**81** நாள் **20.05.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **12.08.2022** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-12 கெவிடு கிருஷ்ணசாமி கவுடர் தெருவில் உள்ள வால்வு பிட்டுகளுக்கு மூடிகள் அமைத்தல் | 0.25 | திரு.பி.முருகன் | 0.20% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.40% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.20% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.190, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.**11.07.2022** ஆம் தேதிய அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **12.08.2022** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் இந்து நடுநிலைப்பள்ளியின் அருகில் எல்.எப்.சாலையின் குறுக்கே புதியதாக பைப்பினால் சிறுபாலம் அமைத்தல் | 3.00 | திரு.ஆர்.சபீர்அலி | 0.50% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 1.00% |

**<u>அலுவலகக் குறிப்பு : –</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.50% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு.ஆர்.சபீர் அலி, கம்பம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.191, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.**11.07.2022** ஆம் தேதிய அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **12.08.2022** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் இராஜாங்கம் சிலையின் அருகில் எல்.எப்.சாலையின் குறுக்கே புதியதாக பைப்பினால் சிறுபாலம் அமைத்தல் | 3.00 | திரு.ஆர்.சபீர்அலி | 0.60% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.90% |

**<u>அலுவலகக் குறிப்பு : –</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.60% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு.ஆர்.சபீர் அலி, கம்பம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.192, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.12**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர், இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.471/2022/A2 நாள்.23.08.2022 கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கூடலூர் நகராட்சியின் பங்களிப்பு தொகை 2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.30,000/– (ரூபாய் முப்பது ஆயிரம் மட்டும்) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூருக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.193, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலக்கூடலூர் கிராமம்,புல எண்:1762/1Bல் 1.06 ஏக்கர் பரப்பளவுள்ள இடமானது “இராஜா கிணறு” என்று சொல்லப்படுகின்ற இடமாகும்.மேலும் மேற்படி இடத்தில் உள்ள கிணறு 1952ம் ஆண்டு நகராட்சி மூலம் தூர்வாரப்பட்டு ஆயில் இன்ஜின் நிறுவி கிணறு மூலம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் நகரில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்துள்ளது.மேற்கண்ட இடத்தில் உள்ள பலன்தரும் மரங்களை நகராட்சி மூலம்

குத்தகைக்கு விடப்பட்டு தற்போது வரை நகராட்சியே பராமரித்து வருகிறது.மேலும் நகராட்சிக்கென சொந்தமான பூங்கா அமைக்க இடம் ஏதும் இல்லாத காரணத்தினால்,பொது மக்கள் மற்றும் பெரியோர்கள் பொழுது போக்கிற்கு தகுந்த இடம் இல்லாததால் புல எண்.1762/1Bல் பூங்கா அமைத்தால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமையும்.மேலும் மேற்படி இடமானது நகரளவு ஆவணங்களில் “கிராம நத்தம் ஆரக்கிணறு” என உள்ளதை “நகராட்சி ஆணையாளர்”பெயருக்கு இலவசமாக பெயர் மாற்றம் செய்து தருமாறு கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.194, <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்.14**

இந்நகராட்சியில் குப்பை கொட்டப்படும் பெத்துகுளம் பகுதியை சுற்றியுள்ள உள்ள நிலங்களில் மாசுப்பகுதியில் நிலத்தடி நீர் குறித்து தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் தேனி அவர்களின் மூலமாக பரிசோதனை மேற்கொண்ட வகையில் ஆன செலவினம் ரூ.3410/-ஐ வழங்க கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, மேற்கண்ட தொகையினை வங்கி வரைவோலையாக District Environment Engineer,TNPCB,Theni என்ற பெயரில் எடுத்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.195, <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்.15**

கூடலூார் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.176, நாள் **.12.08.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் வாகனம் எண். TN **60** AY **3850** என்ற EICHER வாகனத்தின் பழுதினை சரிசெய்யும் பணி மேற்கொள்ள **12.09.2022** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1139/2022/எச்.1)**

1. ஓம் சரவணா ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் – ரூ1.40,000/–
2. சுந்தரமாகாலிங்கம் ஆட்டோகேரேஜ், கம்பம் – ரூ1,44000/–

**அலுவலகக் குறிப்பு : –**

**1.**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைவான ஒப்பந்த விலைப்புள்ளிகொடுத்துள்ள ஓம் சரவணா ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

**தீர்மான எண்.196, <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்.16**

இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு **37 DBC** களப்பணியாளர்கள் முற்றிலும் தற்காலிகமாக **Out Sourcing முறையில்** தேனிமாவட்டஆட்சியர் அவர்களிள் செயல்முறை உத்திரவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க கொசுப்புழு ஒழிப்புபணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்தின் மூலம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. இப்ணியானது வருகின்ற 2022 செப்டம்பர் இறுதியில் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில் இப்பணியினை தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்றால் தான் கொசுபுழுக்களை ஒழித்து டெங்குகாய்ச்சல் பரவாமல் தடுக்க முடியம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/J1, நாள்.17.09.2018, மற்றும் தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ந.க.எண்.14770/202/இ2, நாள்.07.09.2020 உத்திரவில் குறிப்பட்டுள்ள வரிசை எண்.32 இல் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு தினக்கூலியாக ரூ.249/– நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலியின்படி ஏற்கனவே பணியில் உள்ள **37 DBC** களப்பணியாளர்களை மட்டும் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள வேண்டி மேற்கண்ட **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்திற்கே வழங்கப்பட்ட ஒப்பந்த நீட்டிப்பு தற்போது ஒப்பந்த நீட்டிப்பு முடிவதால், தற்போதைய சூழ்நிலையில நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் அறிவிறுத்தலின் படியும் **37 DBC** களப்பணியாளர்களை மட்டும் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள வேண்டி மேற்கண்ட நிறுவனத்திற்கு மேலும் அக்டோபர்/2022 முதல் டிசம்பர்/2022 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவீனம் தொகைரூ.**9,90,000/–** க்கு

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு களப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பொதுசுகாதாரஅவசர அவசியம் கருதியும் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்புபணிகளின் அவசர அவசியம் கருதியும் மேலும் அக்டோபர்/2022 முதல் டிசம்பர்/2022 முடிய மூன்று வரை மூன்று மாதங்களுக்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.197, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.17**

அரசு ஆணை (நிலை ) எண் :168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:16.11.2015 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.கஎண்:25480/ஜே3,நாள்:13.06.2013–இன்படி சீருடைப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் சீருடைகள் வழங்க உத்திரவிடப்பட்டதின்படி, கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள், பொது சுகாதார வாகன ஓட்டுநர்கள், குடிநீர்ப்பிரிவு பணியாளர்கள், மின்பணியாளர்கள், ஈப்பு ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு 2022–2023 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான கோ–ஆப் டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கிக் கொள்ளவும் மற்றும் தையற்கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவீனம் தொகை ரூ3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.198, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.18**

கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தினசரி வழங்கப்படும் குடிநீரானது லோயர் கேம்பிலுள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்பட்டு நகர்பகுதிகளில் உள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஆகியவற்றின் மூலமாக சேகரம் செய்யப்பட்டு சீரான முறையில் தினசரி விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் தற்போது குடிநீர் விநியோக பயன்பாட்டு கட்டணம், பராமரிப்பு செலவு, மற்றும் மின்கட்டணம் செலவு தொகை ஆகியவைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. குடிநீர் விநியோக துணை விதிகள் 2003ஆம் ஆண்டு பேரூராட்சியாக இருந்த போது மாற்றம் செய்யபபட்டதாகும் அதன் பிறகு திருத்தம் செய்யாமல் உள்ளதால் குடிநீர் கட்டணத்தின் மூலம் பெறப்படும் வருவாயினை விட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்க்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம் மிகவும் அதிகமாக உள்ளது. எனவே கீழ்க்கண்ட விபரப்படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை உயர்த்திடவும், குடிநீர் விநியோக துணை விதிகள் பத்தி எண்.11 அ, ஆ, இ மற்றும் 12 அ, ஆ இ ஈ மற்றும் 13 ஈ (1) திருத்தம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**குடிநீர் விநியோக துணை விதிகள்**

| குடிநீர் விநியோகம் துணை விதிகள் தற்போதைய நிலை | குடிநீர் விநியோகம் துணை விதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலை |
|---|---|
| 11.அ. வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.3000<br>ஆ) வீட்டு உபயோகமற்ற வியாபார நோக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ4,000/–<br>இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.8000/– | 11.அ. வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.4000<br>ஆ) வீட்டு உபயோகமற்ற வியாபார நோக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.5,000/–<br>இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.10,000/– |
| 12.அ) அளவுமானி மூலம் குடும்ப பயன்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மாதம் ஒன்றுக்கு 7500 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.60/–ம் அதற்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு 10000 லிட்டர் அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.6/– வீதம் வசூலிக்கப்படும். 10000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.8/– வீதம் வசூலிக்கப்படும். | 12.அ) அளவுமானி மூலம் குடும்ப பயன்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மாதம் ஒன்றுக்கு 10000 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.120/–ம் அதற்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு (10000 லிட்டர் வரை) 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.12/– வீதம் வசூலிக்கப்படும். 10000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.16/– வீதம் வசூலிக்கப்படும். |

| | |
|---|---|
| ஆ) குடும்ப காரியங்களுக்கு அல்லாத தொழிற்சாலை மற்றும் வணிக காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 7500 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.100/– 7500லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் 1000லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.15/– வீதம் வசூலிக்கப்படும். | ஆ) குடும்ப காரியங்களுக்கு அல்லாத தொழிற்சாலை மற்றும் வணிக காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10000 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.200/– 10000லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.30/– வீதம் வசூலிக்கப்படும். |
| இ) குடும்ப காரியங்களுக்கு அல்லாத தொழிற்சாலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 7500 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.150/– 7500லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் 1000லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.25/– வீதம் வசூலிக்கப்படும். | இ) குடும்ப காரியங்களுக்கு அல்லாத தொழிற்சாலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10000 லிட்டர் வரை குடிநீர் கட்டணம் ரூ.300/– 10000லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிநீர் கட்டணம் ரூ.50/– வீதம் வசூலிக்கப்படும். |
| (ஈ) இல்லை | தண்ணீர் வசரி (Water Cess) மூன்று மாதத்திற்கு கட்டணம் ரூ.5/– வீதம் வசூல் செய்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்காக. |
| 13 (ஈ)(1) இல்லை | நிர்ணயிக்கப்பட்ட குடிநீர்க் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் அதாவது காலாண்டு முடிவு பெற்ற அடுத்த மாதத்தின் 15–ஆம் தேதிக்குள் செலுத்தாத இணைப்பிற்கு தவணை ஒன்றுக்கு ரூ.50/– அபராத கட்டணமாக வசூல் செய்யப்படும். |

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் விநியோக துணை விதிகள் பத்தி எண்.11 அ, ஆ, இ மற்றும் 12 அ, ஆ இ ஈ மற்றும் 13 ஈ (1) திருத்தம் செய்யதிடவும் மற்றும் இதர நிபந்தனைகளையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.199, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.19**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் மொத்தமுள்ள 21 வார்டுகளில் உள்ள 23 சமுதாய கழிப்பிடங்களும் 2 பொது கழிப்பிடங்களும் உள்ளது மேற்கண்ட கழிப்பிடங்கள் ஒவ்வொன்றும் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது,இக்கழிப்பிடத்தில் உள்ள SEPTIC TANK நிறைந்து கழிவு நீர் வெளியேற முடியாமல் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிப்பறைகளை பயன்படுத்தப் முடியாத நிலையிலும், கழிப்பறைகளை சுற்றி உள்ள பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதால் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாலும் மேலும் இது தொடர்பாக பொது மக்களிடம் தொடர்ந்து புகார் வந்த வண்ணம் உள்ளதாலும் SEPTIC TANK –இல் உள்ள கழிவுகளை தனியார் கழிவுநீர் உறுஞ்சும் வாகனம் மூலமாக அவ்வப்போது உறுஞ்சி எடுப்பதற்க்கு ஆகும் உத்தேச செலவுனம் ரூ.2,50,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்டுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.200, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.20**

கூடலூார் நகராட்சி பொறியியல் பிரிவில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தபட்டு வரும் SKY LADER வாகனத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் ஓட்டுநர் பெற்று வாகனத்தினை இயக்கிடவும், ஓட்டுநருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யபட்ட விலைவிகிதத்தில் ஊதியம் வழங்கிடவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1218, நாள்.31.08.2021ன்படி அனுமதி பெறப்பட்டது. அதனடிப்படையில் 28.09.2021 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று அதில் குறைவான விலைவிகிதம் கொடுத்திருந்த ஒப்பந்ததாரர் திரு.A.தெய்வேந்திரன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியானது இந்நகர்மன்ற தீர்மான எண்.1227 நாள்.30.09.2021ன்படி அங்கீகரிக்கப்பட்டு 04.10.2021 ஆம் நாள் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் ஒப்பந்த காலமானது 30.09.2022 உடன் முடிவடைகிறது. தற்போது G.O.111/17.08.2022 ன்படி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை தெருவிளக்கு பணியின் அவசியம் கருதி மேற்படி பணிக்கான காலத்தினை

மேலும் மூன்று மாத காலங்களுக்கு டிசம்பர் 31 ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்வதற்கும். அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.201, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.21**

கூடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மூன்று நீர் தேக்கத்தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சி பகுதியில் உள்ள வால்வுகளை ஆப்ரேட் செய்வதற்கும் மேலும் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணி பார்பதற்கும் 2019–20 ஆம் ஆண்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலை அட்டவனையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஏழு நபர்களை ஒப்பந்ததாரர் மூலம் (01.04.2021 முதல் 31.03.2022 வரை) ஒரு வருட காலத்திற்கு ரூ.7,00,000/-செலவினத்தில் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1100 நாள்.29.01.2021ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி 26.02.2021 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்திருந்த இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.டி.சித்திரேசன் அவர்களுக்கு 26.02.2021 ஆம் நாளன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.அன்னாரின் ஒப்பந்த காலமானது 30.09.2022 உடன் முடிவடைவதாலும் தற்போது G.O.112/17.08.2022 ன்படி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை குடிநீர் பணி அவசியத்தினை முன்னிட்டு ஒப்பந்த காலத்தினை 31.12.2022 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்திடவும் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.202, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.22**

தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, குமுளி சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித்துறைக்கு பாத்தியப்பட்ட புல எண்.1701–ல் 18.71 ஹெக்டேர் பரப்பளவுள்ள மைத்தல மன்னடி குளம் அமைந்துள்ளது. அக்குளத்தின் ஏரியில் நகராட்சி மூலம் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் தளம் அமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் மேற்படி தார் சாலைக்கு நகராட்சி மூலம் மின் விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான மேற்படி குளத்தினை கூடலூர் நகராட்சிக்கு 90 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்குமாறு ஒப்புதல் வேண்டி தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை தேனி அவர்களுக்கு கடிதம் அனுப்பலாம். அவ்வாறு மேற்படி குளம் கூடலூர் நகராட்சி குத்தகை அடிப்படையில் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அரசு மற்றும் சுற்றுலா துறை மூலம் நிதியினை பெற்று குளத்தினை சீரமைத்து, படகுதுறை அமைக்க வழிவகை செய்யப்படும். மேலும் நகராட்சியின் வருவாய் அதிகரிக்கவும் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படவும் இயலும். எனவே, மேற்கண்ட குளத்தினை நகராட்சிக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்க கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.203, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.23**

தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள நிலத்தின் புல எண்கள் அனைத்து கிராமம்–சர்வே எண்களாக இருந்து வருகிறது. ஏற்கனவே வருவாய் துறை மூலம் சர்வே எண்களை நகரளவு எண்களாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு, பகதி பணியுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுளள பணிகள் இதுநாள்வரை மேற் கொள்ளப்படவில்லை. மேலும், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை கண்டறியவும் அளவீடு செய்வதற்கும் நகர் சார் ஆய்வாளர் இதுநாள்வரை

நியமிக்கப்படவில்லை. எனவே, சர்வே எண்களை, நகரளவு எண்களாக மாற்றம் செய்யும் பணி தொடரவும் மற்றும் கூடலூர் நகராட்சிக்கான தனியாக நகர் சார் ஆய்வாளர் நியமிக்கவும் வருவாய் துறைக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.204, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் சத்துணவு மையங்கள் அனைத்தும் கம்பம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. அதனால் பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்த்தல், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை நகராட்சி மூலம் மேற்கொள்வதற்கு இயலாத நிலை உள்ளது. எனவே, கம்பம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகள், பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் சத்துணவு மையங்களை நகராட்சி ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்து தருமாறு வருவாய் துறைக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.205, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.25

இந்நகராட்சியில் நடைபெற்ற 75–வது சுதந்திர தின அமுத பெரு விழா குறித்த விளம்பரத்தினை இந்து தமிழ் திசை தினசரி நாளிதழ்களில் வெளியிட்டதற்கு கீழ்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பட்டியல் எண் மற்றும் நாள் | நாளிதழ் விபரம் | விளம்பர கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | 194 நாள் 16.08.2022 | இந்து தமிழ் திசை நாளிதழ் | 15,000/- |

**<u>அலுவலக குறிப்பு</u>.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.206, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.26

கூடலூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP) 2018-2019ன் கீழ் ரூ.**500.00** இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**12981/2018/இ3 நாள்.02.08.2018 ன்.**படி மூன்று சிப்பங்களாக சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது நகராட்சி பங்களிப்பு ரூ.50.00 இலட்சம்,ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி ரூ.190.00 இலட்சம், SFC/CFC நிதி ரூ.150.00 இலட்சம் மற்றும் (SFC INCENTIVE) மாநில நிதி ஆணையத்தின் ஊக்கு விப்பு தொகை ரூ110.00 இலட்சம் வீதம் நிதி பங்களிப்பில் செலவினத்தினை ஈடு செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிப்பங்களிப்பில் ஒருங்கிணைந்த நகர்புறசாலைகள் அபிவிருத்தி திட்ட நிதி ரூ.190.00 இலட்சம் (TURIP) திட்ட நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு வரப்பெறும் SFC/CFC நிதியில் ரூ.150.00 இலட்சமும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.50.00 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.தற்போது நிதி ஊக்குவிப்பு தொகை ரூ.110.00 இலட்சம் இந்நகராட்சிக்கு விடுவிக்கபடவில்லை ஒதுக்கீடு செய்யபட்ட ஊக்குவிப்பு தொகையினை விடுவிக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு இவ்வலுவலக 14.12.2020 ஆம் நாள் கடிதம் மூலம் அனுப்பபட்டது. தற்போது ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2018-19ன் கீழ் 100% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. முடிக்கபட்ட திட்டபணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க வேண்டியுள்ளது. ஏற்கனவே மேற்படி திட்டத்திற்குரிய நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.50.00 இலட்சமும் நகராட்சி பொதுநிதியில் ஒதுக்கீடு செய்து பட்டியல் தொகை வழங்கபட்டுவிட்டது.இந்நிலையில் மேலும் ரூ.110.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.எனவே மேற்படி தொகை **ரூ.110.00** இலட்சத்தினை அரசின் **CGF/IGFF** நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.207, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.27

கூடலூர் நகராட்சியில் அலுவலக ஆணையாளர் மற்றும் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் வாகனம் எண்- TN-60 R-6378ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் செய்யவும் வாகனத்தின் அவசியம் கருதியும் வாகனத்தை இயக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.208, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.28

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனஙகளுக்கு 2022–2023 ஆம் ஆண்டிற்க்கு செலுத்தவேண்டிய காப்பீட்டு பீரிமியத்தொகை செலுத்த வேண்டி யூனைட்டேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டேட் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட விவரம்படி காப்பீட்டு பீரிமியத்தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ . எண் | வாகனஎண் மற்றும் பெயர் | பீரிமியத்தொகை: ரூ |
|---|---|---|
| 1 | TN 60 T 6093 EICHER | **22173** |
| 2 | TN 60 AY 3850 EICHER | **35760** |
| 3 | TN 60 AY 4473 TATA ACE | **20072** |
| 4 | TN 60 AY 4486 TATA ACE | **20072** |
| 5 | TN 60 AY 4052 TATA ACE | **22575** |
| 6 | TN 60 AV 4020 TATA ACE | **22575** |
| | TOTAL | **143227** |

**அலுவலகக் குறிப்பு : –** 1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.209, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.29

கூடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் போலிரோ ஈப்பு வாகனம் எண்- TN-60 Y-7332 வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் ,சிறு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.210, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.30

கூடலூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MAWS)(MC-2)அரசாணை எண். G.O(M.s)No.40 நாள்.**05.02.2021**ன்படி இந்நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2020-21ன் கீழ் சாலை பணிக்கு ரூ.**250.00** இலட்சம், மழைநீர் வடிகால் பணிக்கு ரூ.**26.50** இலட்சம், தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.**4.80** இலட்சம் மற்றும் குடிநீர் பணிக்கு ரூ.**80.00** இலட்சம் ஆக மொத்தம் ரூ.**361.30** இலட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.அதனை தொடர்ந்து மேற்படி அரசாணையில் வரிசை எண் -5 ல் தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் (ம) மதுரை சென்னை மற்றும் கோவை மாநகராட்சிகள் ஆகியவற்றிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு ரூ.**89.35**/- கோடிக்கு மட்டுமே நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள். ந.க.எண்.**2988/2019**/TP3 நாள்.**04.03.2021**ன்படி ரூ.**89.35** கோடியும் விடுவிக்கபட்டதில் இந்நகராட்சிக்கு ரூ.**291,46,865**/- விடுவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.361,30,000/- ல் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.291,46,860/-போக மீதமுள்ள தொகையினை நகராட்சியின் நிதியிலிருந்து ஈடுசெய்ய வேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதன்படி மீதமுள்ள தொகை ரூ.69,83,140/-ஐ நகராட்சியின் பொதுநிதி அல்லது குடிநீர் நிதியின் மூலம் ஈடு செய்து கொள்ள அனுமதி வேண்டபடுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.211, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.31**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனஎண் TN 60 T 6093 என்ற EICHER வாகனத்திற்க்கு 2022–2023 ஆம் ஆண்டிற்க்கு தகுதிசான்று (FC) பெற புதுப்பித்தல் மேற்கொள்ளும் பொருட்டு வாகனத்தில் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதனை மேற்கொள்ள ஆகும் உத்தேச செவவினம் ரூ1,36,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு : –** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.212, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.32**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனஎண் TN 60 AV 4020 என்ற TATA ACE வாகனத்தில் பிளாட் பாரம் மற்றும் குறுக்கு சேனல் பழுதடைந்துள்ளதால் மேற்படி வாகனத்தை இயக்க முடியவில்லை அதனால் பொது சுகாதார பணிகள் பாதிப்பதுடன் , திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது எனவே புதிய பிளாட் பாரம் மற்றும் சேனல் பழுதடைந்துள்ளதை சரி செய்ய ஆகும் உத்தேச செவவினம் ரூ.43,500/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு : –** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.213, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.33**

கூடலூர் நகராட்சியில் கேரள தமிழக எல்லைப்பகுதியான குமுளியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க 30.04.2022 ஆம் நாளன்று தேனி மாவட்டம் ஊஞ்சாம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அரசு விழாவில்,அரசு செய்தி வெளியீடு எண்.700ன்படி மான்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்து அறிவிக்கபட்டுள்ளது. அதன்படி விரிவான திட்ட பிரேரணை தயார் செய்திட தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

தற்போது மத்திய அரசு திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கான விகிதங்கள் Jawaharlal Nehru National Urban Renewal Mission (GoI) திட்டத்தின் Supplementary Tool Kit வழிகாட்டுதலின்படி திட்டப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கீழ்க்கண்ட விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

As per Table 1: Basis for Reimburstment of Cost related to Preparation of DPR's-இன் இனம் 2(b) –இல் தெரிவித்துள்ளபடி

| | |
|---|---|
| ரூ.20.00 கோடி வரை | – 1.50% |
| ரூ.20.00 கோடி முதல் 70.00 கோடி வரை | – 1.25% |
| ரூ.70.00 கோடி முதல் ரூ.100.00 கோடி வரை | – 1.00% |
| ரூ.100.00 கோடிக்கு மேல் | – 1.00% |

கூடலூர் நகராட்சியில் உள்ள குமுளியில் அமைக்கவுள்ள பேருந்து நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய நியமனம் செய்யபடும் தனியார் கலந்தாலோசகர் நிறுவனத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் மதிப்பீட்டுத் தொகைக்கு ஆலோசகர் (Consultant) -க்கான தொகையினை மேற்படி விகிதத்தில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.214, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.34**

கூடலூர் நகராட்சி 21 வார்டுகளிலும் ஏற்கனவே அமைந்துள்ள தெருவிளக்குகளில் பொருத்தப்பட்டுள்ள TIMER சுவிட்சுகள் பழுதடைந்துள்ளது.தினசரி காலை மாலை இரண்டு வேலைகளிலும் தெருவிளக்குகளை ON/OFF செய்ய வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் நேர வித்தியாசத்தினால் மின்சார பயன்பாடு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.மின்சார பயன்பாட்டினை கட்டுபடுத்தும் பொருட்டு பழுதாக உள்ள TIMER SWITCH களை புதியதாக வாங்கி 35 இடங்களில் பொருத்துவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.215, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.35**

கூடலூர் நகராட்சி பகுதியில் புதிதாக அமைக்கபட்டு வரும் 30 தெருவிளக்குகளுக்குரிய புதிய மின் இணைப்புகளுக்கு தேவையான மின் இணைப்பு பெட்டிகள், போர்டுகள், கிளாம்பு செட்டுகள், டைமர் சுவிட்சுகள் மற்றும் தேவையான வயர்கள் ஆகியவை வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.216, அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்/-)லோ.பத்மாவதி**
**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**